79

MADRAS. 1919

உ

அம்பாள் துணை.

திருவொற்றியூர்

ஸ்ரீ வடிவாம்பிகைத் தாயார்,

பஞ்சரத்தினம்.

திருப்போரூர்

முருகக்கடவுள்

பஞ்சரத்தினம்.

இவை

முட்டுக்காடென்று வழங்கிவரும் முத்தூநகரில் வசிக்கும்,

ஸ்ரீமான். அப்புலு நாயுடவர்கள்

விருப்பத்தின்படி

கோவளம்-வித்துவான்

குட்டிச்சாமி நாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை

கிச்சினா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப் பட்டன.

1912.

உ

அம்பாள் துணை.

திருவொற்றியூர்

ஸ்ரீ வடிவாம்பிகைத் தாயார்,

பஞ்சரத்தினம்.

திருப்போரூர்

முருகக்கடவுள்

பஞ்சரத்தினம்.

இவை

முட்டுக்காடென்று வழங்கிவரும் முத்துநகரில் வசிக்கும்,

ஸ்ரீமான். அய்யுலு நாயுடவர்கள்

விருப்பத்தின்படி

கோவளம்- வித்துவான்

குட்டிச்சாமி நாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை

கீச்சினர் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பட்டன.

1912.

MADRAS

உ

சிவமயம்.

சாத்துகவிகள்.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள்,

இயற்றிய

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குலவியநற் பிரணவசை லத்தொளிரும்
போரூர்நங் குமரவேட்குங்
கொடைமலியொற்றியம் பதியில் வடிவாம்
பிறைத்தாய்க்குங் குளிர்பாற் சிந்து
நிலவியவெண் ணமுதத்தி னுஞ்சுவைதேர்
பஞ்சரத்ன நிலவ ளித்தா
னிலைத்தகோ வளக்குட்டிச்சாமி நாவல
னியற்ற நேர்மை தேர்ந்து
பலவியன்சேர் முட்டுக்கா டெனுமுத்து
மாநகரைப் பரிந்து வந்த
பார்த்தசா ரதிக்கோமா னருந்தவத்தி
லேயுதித்துப் பகர்தற் கேற்ற
நலமனைத்து மெய்யமைந்த வையலுவே
ளச்சிட்டு நலக்கச் செய்தா
ருளிலத்தி லவன்புத்ரர் பௌத்திர
ரோடேவாழ்க நாளு மாதோ.

உ

வேலுமயிலுந் துணை.

சென்னைக் கிரிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்
உரையாசிரியருஞ் சைவப்பிரசாரணருமாகிய
ஈக்காடு. இரத்தினவேலுமுதலியாரவர்கள் ஜேஷ்ட குமாரர்,

வித்துவான்

ஈகை-சபாபதி முதலியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஒற்றிவடி வாம்பிகைக்கு மொண்போரூர்ச் சண்முகற்கு
நற்பஞ்ச ரத்தினத்தை நாமுறச்—சொற்றிட்டான்
கோவளக்குட் டிச்சாமி கோதில்கவி ராஜசிங்க
நாவலத்தை யென்சொல்கே னான். க.

இத்தகைய நூலி னெழிலனைத்து நன்கோர்ந்து
சித்தமகிழ்ந் திட்டுச் சிறப்புடனே—முத்தாங்க [வர்
சய்யுலுவச் சிட்டளித்தா னன்னதைக்காணா உப்புல
மெய்யன்பேற் பாரிப்பார் மேல். உ.

உ

சிவமயம்.

முட்டுக்காடு ஸ்ரீமான் அப்புனு நாயுடவர்களால்
இந்நூலச்சிடப்பட்டதற்காக இந்நூலாசிரியர் வியந்துகூறிய

வெண்பா.

நல்லமுட்டுக் காட்டில்வரு நாடப்புனு நாயுடனை
யெல்லவர்க்கு மச்சியற்றி யீந்ததினாற்—பல்லருஞ்சீர்ப்
புத்திரப வுத்திர பூஜிதனை வாழ்த்திடுக
வத்த னருளா லமர்ந்து.

உ

அம்பாள் துணை.

திருவொற்றியூர்

ஸ்ரீ வடிவாம்பிகைத்தாயார்

பஞ்சரத்தினம்.

வெண்பா.

ஒண்பார் புகழொற்றி யூர்வாழு முத்தமியாம்
பண்பார் வடிவம்மை பஞ்சரத்னம்—திண்பாவிற்
செப்பத் துணையாகச் சிந்துரத்தின் மாமுகனை
யொப்பமுட னெஞ்சேநீ யோது.

ஆசிரிய விருத்தம்.

நீரேறு முகிலனைய குழலி னழகுந்தவள
நிலவென முகத்தி னழகும்
நிகழ்கமல மனையத்ரி நேத்ரவழகும் நகை
நேர்க்குமுத வாயி னழகும்
ஏரேறு காழியர்க் கின்னருள் சுரந்தமுத
மேந்துமிரு கொங்கை யழகும்
என்னிரு கணனைய நின்றிருவடிகளுங்கண்
டிறுமாந் திருப்ப தென்றோ
பேரேறு மாரணி ஐம்பூத காரணி
பிரசமாமலர் நாரணி
பிறங்கு மாற்றாரணி தந்தபரி பூரணி
பெரிதுவந் தருள்புரிகுவாய்
சீரேறு மணிமாட மேனில வெறிப்பத்
திகழ்தரு மொற்றிநகர் வாழ்
த்ரிபுர சுந்தரவிமல நடனத்தியாகேசர்
ஜீவமா ணிக்க வடிவே. (1)

எல்லாம் நின் செயலென விருக்கவேண்டும் நா
னென்பதை யகற்ற வேண்டும்
என்றுமுனை வந்தித்து வரவேண்டும் வரவுதற்
கிடருறு திருக்க வேண்டும
நல்லார்க ளுறவுகைக் கூடல்வேண்டும் கொடிய
நல்குரவி லாமை வேண்டும்
நாற்பத்து முக்கோண சக்கரத்தாடுநின்
நடனதரி சனமும் வேண்டும்
வில்லாருந் திரிசூலி மறைசூலி சாந்தகுண
மே விளங்குங்காளி
வித்தகி சற்குணசாலி யமபயங்கரகாளி
மித்தையென் றனக் கருளுவாய்
செல்லாரு மாபலா கதலியாதிய வளந்
திகழ்தரு மொற்றி நகர்வாழ்
த்ரிபுர சுந்தரவிமல நடனத் தியாகேசர்
ஜீவமா ணிக்க வடிவே. (2)

பஞ்சவிந்திரியமும் வசமாகவேண்டு மெனை
பாவி யென்னாமை வேண்டும்
பாதார விச்சையில் லாமைவேண்டும் யம
பயங்கர மில்லாமை வேண்டும்
தஞ்சமென வந்தவரைக் காக்க வேண்டுஞ் சினஞ்
சற்றுமில் லாமை வேண்டும்
தவளவெண் டிருநீறு டக்கமணி தீக்ஷையுஞ்
சற்குருவால் பெறவும் வேண்டும்
அஞ்சாத மகமாயி ஜெகதாயி யன்பருக்
கருள்சுரந்திடு சகாயி
அரவாத மின்சொல் கிலவிய வாயி யூழேலா
மகற்றியாட் கொளுமு பாயி

செஞ்சாலி யங்கழனி தன்வாவி யோடையுந்
திகழ்தரு மொற்றி நகர் வாழ்
த்ரிபுர சுந்தரவிமல நடனத்தியாகேசர்
ஜீவமா ணிக்கவடிவே. (3)

அந்த கரணங்களும் வசமாக வேண்டு நெஞ்
சஞ்சலமிலா திருக்க வேண்டும்
அறிவொன்று நீடித்து வரவேண்டு மென்றுமே
ஐயமிட் டுண்ணல் வேண்டும்
முத்துவிரதங்களில் முயலவேண்டும் முழு
மூட ருறவின்மை வேண்டும்
மூர்த்தி தலதீர்த்த முங்காண வேண்டுஞ் சால
முத்திநெறி யறிய வேண்டும்
ஐந்தொழிற் கதிகாரி யைந்தமிழ்க் குபகாரி
யமலியாமளை சிங்காரி
அத்வைத ரீங்காரி யுத்தண்ட கௌமாரி
யடியனேற் கருள்புரிகுவாய்
சித்தரியாற்றுபூங் கமலமல ரோடைந்
திகழ்தரு மொற்றிநகர்வாழ்
த்ரிபுர சுந்தர விமல நடனத்தியாகேசர்
ஜீவமா ணிக்க வடிவே. (4)

மிகுதெய்வ தூஷணை யிலாமைவேண்டும் மரண
வேதனையி லாமை வேண்டும் [ல்
மேதகு வாய்மை யொன்றினிது வேண்டும் புலா
வெறுத்த லேமிகவும் வேண்டும்
இகல்பிணிகள் வாராதிருக்க வேண்டும் சற்று
மௌனதெய்ப தின்மை வேண்டும்
இகபர சுகங்களுந் தருதல் வேண்டுந் தயை
இயற்றியருள்வா யம்மணி

சுகந்தருந் திரிமாதுவினதன்பரைத் தீது
  திண்ணெனத் தொடர்ந்திடாது
சொற்பெரும் புவிமீது நீ தெய்வமல்லாது
  சுதந்தர தேவதைகளேது
சிகிமாதர் குழலைகனமென விளைந்தரு நடங்
  திகழ்தரு மொற்றி நகர்வாழ்
த்ரிபுரசுந்தர விமல நடனத்தியாகேசர்
  ஜீவமாணிக்க வடிவேவ.

உ

வேலு மயிலுந் துணை.

திருப்போரூர் ஸ்ரீ முருகப்பிரான்

பஞ்சரத்தினம்.

வெண்பா.

சீராரும் போரூர்ச் சிவசுப்ர மண்யன்மேல்
போராரும் பஞ்சரத்னம் பேசுதற்கு—நேராக
வந்தாரத்தின் சால வலியகய சம்மார
சிந்தூரத்தின் மாமுகனைச் செப்பு.

ஆசிரிய விருத்தம்.

பரிதிமதி யனையசுடர் மணிமகுட மோராறு
  பதிந்தொளிர்கின் முடிகளழகும்
படலைவ தனங்களிரு மூன்று மவ்வதனத்தில்
  பன்னிருநல் விழிகளழகும்
அரிதிகிரி யனையவே லிலகுவஸ்த்தங்கள் கிரி
  யனையதிண் டோள்களழகும்

அர்க்கமல மலையவிரு தாளுமின் வேழை கண்
டானந்த முறுவ தென்றே
கருதிசொலு மையபால வசுரர்பெருங் குலகால
சுரர்கள்குல பரி பாலசீர்
தொழுமடியர் மிடிகால பொதியவரை முனிகூல
துகளில்திரு வடிவேலனே
சரிதைகிரி யாயோக ஞானசிங் காரசொரூ
சாரவெற் கருள் செய்குவாய்
சமரபுரி மாமுருக வமார்திதி மால் மருக
சமயபதி நீ வருகவே (1)

எந்தனுல் முடியாது மிடியேது பொல்லாது
நீடேற வைத்தி டாது
இது வென்ன பேயோ பெரும்பூதமோ
காலபிரம்ம ராக்ஷசனோ வலால்
தந்திரோ மடக்கலோ காரவோ வராவோவாயி
தனைநினைந் திடிலென் மனந்
தடுமாறியே யதின் முடிசாயுதேயி தைத்
தடுத்தாக்க மருள்செய் கண்டாய்
சுந்தருவர் புகழ்மார வந்தார்கள் அதிசிர
கைலயங் கிரி குமார
கருணைபொழியுந்திர வருணகிரி யுபகார
கார்கொள் தாருக சம்மார
சந்தமுறு மங்கையர்க டம்பதி யுடன்வந்து
சந்தானம் வினவ வருள் செய்
சமரபுரி மாமுருகா வமார்திதிமால் மருக
சமயபதி நீ வருகவே, (2)

ஆறுமென்றலே முடியாது முடியாது
அப்பப்ப வென் சொல்லுகேன்

அஞ்ஞான சமுசார துக்கத்தி லாழ்ந்தென்
மாடக்ப்பு மென்னையழைத்து
தேனாரும் பதுமாசனத் தெழுந்தாயினால்
திருவருளி யற்றலைவைத்தென்
சிறுமையை யொழிக்கிலுன் பெருமையைப்
செழித்துலகில் வாழ்கு வேனே
காணருங் குறமாது மணவாள வினியேது
கலியென் னிடம் வாரது
கண்கண்ட புலிமீது நீ தெய்வ மல்லா
கருணைபுரி கடவுளேது
தாளுனுபடியுமே தானேறி தாணுருங்
தவராஜருங் துதி செயுஞ்
சமரபுரி மாமுருக வமார்த்தி மால்மருக
சமயமிது நீ வருகவே.

இப்பாவி தன்னையே சிறுகுழவி யாதியா
யிதுவரை புரக்கீ ரென்றால்
இன்னமேல் வேளைக்கோரிக்கட்டும் வாரா
தெனைப்புரப்பீர் நிச்சயம்
அப்பனே யிதுவிற்கு திரிகரண சுத்தியோ
டனவர தம்பணி யன்பரை
யாட்கொளுந் தன்மைசொல நாட்கொளு மெ
காகில் வேதகஞ் சொல்லலாம்
துப்பாரும் வான்வாச சுராஜ மகனேச
சொனு மீச வுபதேசமா
சூர்பெருங் குலநாச சீர்தரும் விசுவாச
தகளிற்றிரு முருகேசனே
தப்பாமலேதினஞ் சதுரான னத்தனே
சதுர்மறையி னற்றுதி செயுஞ்

சமயபுரி மாமுருக வமார்த்தி மால்மருக
சமயமிது நீ வருகவே. (4)

சீர்கொண்ட நீர் முகிலை கண்டு நேசிக்க மணி
சிகர மாளிகை னேதுக்
திருமயில் வாகனு செல்லுசத் கன்னிகைமதி
திகழ் மவுலிபா னருள்சுதா
கார்கொண்ட பூங்குழல் வள்ளிநாயகபரிதி
கடல்சூழ் பொன் நிலவுல கெலாங்
கருணை பொழியானை முகன் மகிழ்மலை கனிகர்பு
கதித்த தின்றனை வழுத்த [கா
வர்கொண்ட திரிகரண சுத்தியருளுக்கிரண
மெனவொளிர் கிண்கிணி சரணீர்
எந்தனுக் கிதுதருண மேயருள தேவர்முத
லெங்கள் குல வாபரணனே
தார்கொண்ட பூதிருத்ராக்ஷமணி
மாகஷியோர் சந்ததம் பரவவருள் செய்
சமயபுரி மாமுருக வமார்த்தி மால்மருக
சமயமிது நீ வருகவே. (5)

திருக்கழுக்குன்றம்,
திருமலைச் சொக்கநாயகி அம்மையார்,
பஞ்சரத்தினம்.

விநாயகர் துதி.

எருலாம்பவானனவெங்கூதயே
சீருலாங்கழுக்குன்றினிலேதிகழ்
நாருலாஞ்சொக்கநாயகியைச்சொலப்
பாருலாமெனக்கேயருள்பண்ணுவாய்.

ஆசிரியவிருத்தம்

திருவார்பூம் பொழில் சூழ் கழுக்குன் றைதெரிசிக்க
வருவார் பிணியொழித் திடவக்குன் றின்வட பாலில்
உருவா யொளிரு முமை யேயனைய வுத்தமி நீ
தருவாய் சுகவாழ்வெனக்கினிதாகத் தயை கூர்ந்தே.

கூறுங் கழுக்குன்றைத் துதிசெயவே கோருநரை
வாருமென வழைத்தரிய கழுக்குன்றின் வடபாலில்
சீரும் புத்ரப் பேறுந்தரவே திகழுநனி
பாரும் விண் ணுமேற்ற நிலாவும் பண்ணவியே.

பண்ணார் மறைமுடியொளிர்கழுக்குன் றம்பார்ப்பவரை
வண்ணார் நகைபுரிந்தழைக்க வக்குன்றின் வடபாலில்
கண்ணார் சொக்க நாயகியென்னைக் காப்பவரார்
எண்ணுதவரென வென்னையுமெண்ணி யிருந்தாலே.

இருந்தவர் புகழுங் கழுக்குன் றினையே யேற்றுநரை
வருந்தியழைத்தருள வக்குன்றின் வடபாலில்
தெரிந்தினி தோங்குமென்றுயே யிச்சிறியனையே
பரிந்தவர் தென் றுயர் களைந்தருள்செய் பராபரையே

பரிவாய் வேதம்பகர் கழுக்குன்றைப் பார்ப்பவரை
வருவா யென வழைத்தருளவக் குன்றின் வடபாலில்
திருவாய் நின்றொளிர் சிற்சுகானந்தத் தெள்ளமுதே
தருவா யாக்கமொடு மெய்ஞ்ஞானந் தழைத்திடவே.

பஞ்சரத்தினம் முற்றிற்று.

68443